# தமிழ்நாட்டில் உள்ள அங்கக விவசாயிகள்

## (ஆதாரம்: அங்கக விவசாயிகளின் கூட்டமைப்பு பற்றிய இந்திய ஆய்வு, 2009)

| வ. எண். | அங்கக விவசாயி மற்றும் முகவரி | குறிப்புகள் |
|---|---|---|
| 1. | திரு. சிவப்பிரகாசம்,<br>ஆரணாரை,<br>பெரம்பலூர்,<br>திருவள்ளுவர் மாவட்டம்,<br>தமிழ்நாடு. | • திரு. சிவப்பிரகாசம் அவர்கள் ஆறு ஏக்கர் நிலத்தை பாசன உதவியுடனும், ஆறு ஏக்கர் நிலத்தை மானாவாரியாகவும் பயிர் செய்து வருகிறார். பண்ணைப் பணிகளில் குடும்ப உறுப்பினர்கள் ஈடுபடுகின்றனர். அவர் கம்பு, மிளகாய், நிலக்கடலை, சோளம், கொத்தமல்லி, துவரை, சூரியகாந்தி, வெங்காயம், கரும்பு மற்றும் நெல் போன்ற பயிர்களைப் பயிரிட்டு வருகிறார். ஒரே வயலில் செடிகள் மற்றும் மரங்களை சேர்த்து வளர்க்கிறார். அவை தக்காளி, மிளகாய் (மூன்று மாத பயிர்கள்), எலுமிச்சை (நான்கு வருடம், 20 அடி இடைவெளி) மற்றும் முருங்கை (10 அடி) அதனுடன் தேக்கு மற்றும் சவுக்கு மரங்களை வயலைச் சுற்றி நடவு செய்துள்ளார்.<br>• பண்ணையில் உள்ள மாடுகளில் இருந்து வயலுக்குத் தேவையான அங்கக உரங்கள் பெறப்படுகின்றன. வயல் வரப்புகளில் நடப்பட்டுள்ள முருங்கை இலைக் கழிவுகள் மற்றும் பண்ணைக் கழிவுகளில் இருந்து மண்புழு உரம் தயாரிக்கப்படுகின்றது.<br>• சராசரி குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை அங்கக முறையில் ஒரு அரை ஏக்கர் நிலத்தில் பயிர் செய்வது இவரின் வருங்காலத் திட்டம் ஆகும்.<br>• இவர் விவசாய சமூக நடவடிக்கை மேம்பாட்டுத் திட்டத்தில் செயலாளராக உள்ளார். சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் நிலத்தைத் தொடர்ச்சியாக விவசாயம் செய்வதைத் தடுப்பதற்கான ஒரே வழி நீடித்த நிலையான விவசாய முறை ஆகும். |
| 2. | திரு.G.பாலகிருஷ்ணன்,<br>புத்தாரம் பண்ணை நிலம், | • இவர் ஆற்றல் மிகுந்த ஓய்வு பெற்ற பொறியாளர். தனது குடும்ப நிலத்தை |

| | | |
|---|---|---|
| | திருகத்திப்பள்ளி(வழி),<br>தஞ்சாவூர் மாவட்டம்,<br>தமிழ்நாடு. | இவர் பார்த்து வருகிறார். மரப்பண்ணை வைத்திருக்கிறார். பல்வேறு ரக மரங்களை இவர் நடவு செய்துள்ளார்.<br>• இவர் இந்த நிலத்தை சாகுபடி செய்த காலத்தில், மணல் மேடாக இருந்தது. மண்ணை சமன் செய்து பின் மரங்களை நடவு செய்தார். பழ மரங்கள் தவிர, தீவன மரங்கள் மற்றும் மரக்கட்டை மரங்களை நடவு செய்துள்ளார். தேக்கு, யூகலிப்டஸ், கொய்யா, மரவள்ளி, நெல்லிக்காய் போன்ற மரங்களை நடவு செய்துள்ளார். சூபாபுல் மற்றும் யூகலிப்டஸ் மரங்களைக்கொண்டு உயிர்வேலி அமைத்துள்ளார்.<br>• இந்த விவசாயி, கிராமங்களில் கிடைக்கக் கூடிய அங்ககக் கழிவுகளைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கிறார். மேலும் அவர் அங்ககப்பொருட்களில் நுண்ணுயிர் செயல்பாடு பற்றி அறிவதில் ஆர்வம் கொண்டு, இரண்டு வேறு பூஞ்சாணங்களை உபயோகித்து அங்ககப்பொருட்களை மட்கச்செய்துள்ளார்.<br>• ஒன்று புளூரோட்டடஸ் இனங்கள், மற்றொன்று தண்ணீர் தொட்டியின் மேற்பரப்பில் காணப்படும் பூஞ்சாணங்கள். |
| 3. | திரு.உமேஷ், சந்திர சேகர் மற்றும் திருமதி. மீனாட்சி பூவிதம்,<br>நாகர்கோடல் கிராமம்,<br>இந்தூர் (வழி),<br>தர்மபுரி-636 803.<br>தமிழ்நாடு.<br>தொலைபேசி:04342-31164<br>இமெயில்:puvidhamtrust@<br>yahoo.com. | • இவர் ஒரு இயந்திரப்பொறியாளர். “விவசாய நாயகன் மற்றும் சுற்றுச்சூழல்” என்ற அரசு சாரா அமைப்பில் பகுதி நேர வேலை பார்த்து வருகிறார். மீனாட்சி ஒரு கட்டிட அமைப்பாளர், இவர் குறைந்த செலவில் வீடுகள் கட்டித்தருவதில் சாதனை படைத்தவர். மேலும் இவர்கள் கிராமப்பறங்களில் வேலை பார்ப்பது ஒரு அர்த்தமுள்ள வேலையாகக் கருதுகின்றனர்.<br>• இவர்கள் 1992 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் 12 ஏக்கர் நிலத்தை முதலீடு செய்தனர். மலையின் சரிவில் அமைந்துள்ள இந்த நிலங்கள், சில புதர்களைத் தவிர முற்றிலும் தரிசான, தரம் குறைந்த நிலங்கள். கடந்த 10 |

| | | |
|---|---|---|
| | | வருடங்களாக எண்ணற்ற மரங்கள் நடவு செய்யப்பட்டு, மண் மற்றும் நீர் சேகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சோளம், கம்பு, வரகு, துவரை, காராமணி, பச்சைப்பயறு, நிலக்கடலை போன்ற பயிர்கள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. கீழ்க்கண்ட பயிர்த்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.<br>• சாமை (ஜூலை)–சணப்பை மற்றும் தக்கைப்பூண்டு(அக்டோபர்)- கோதுமை (டிசம்பர்)<br>• சாமை – சோளம் – துவரை- கொள்ளு<br>தட்டைப்பயறு, ஊடுபயிராகவும், நிலக்கடலை தனிப்பயிராகவும் வளர்க்கப்படுகிறது. தீவனம் மற்றும் பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சூபாபுல் மற்றும் கிளைரிசிடியா, தேக்கு, பழ மரங்களான பப்பாளி, எலுமிச்சை மற்றும் கொய்யா போன்ற மரங்கள் வளர்க்கப்படுகின்றன. குடும்பத்திற்குத் தேவையான காய்கறிகளும் பயிர் செய்யப்பட்டுள்ளன. பண்ணை நாற்றங்காலில், நாற்றுகள் வளர்க்கப்படுகின்றன.<br>மாட்டிற்குத்தேவையான வைக்கோல் வெளியில் இருந்து கொண்டு வரப்படுகின்றன. மட்கு எரு பண்ணையிலேயே தயார் செய்யப்படுகிறது. சோலார் பம்புகள், பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.<br>பூச்சி கட்டுப்பாட்டு முறைகள்:<br>• சாம்பல் மற்றும் மோர்<br>• வேப்பங்கொட்டை சாறு<br>• மாட்டு கோமியம்<br>• வைரஸ் தாக்கப்பட்ட மிளகாய் இலைகளை பொடி செய்து மாட்டு கோமியத்தில் கலந்து உளுந்தைத் தாக்கும் வைரஸ் நோய்க்கு ஏதிராகத் தெளிக்கவும். |
| 4. | திரு.கணபதி,<br>சக்தி பண்ணை,<br>வீரபதி,<br>புலியூர்(அஞ்சல்),<br>குளத்தூர்தாலூகா, | • திரு.கணபதி அவர்கள் சிறு விவசாயி, அவர் தாயார், மனைவி மற்றும் மூன்று குழந்தைகளுடன் வசித்து வருகிறார்.<br>• இவர் ஒரு புதுமையான அறிவு மிகுந்த விவசாயி. |

| | | |
|---|---|---|
| | புதுக்கோட்டை -622 504,<br>தமிழ்நாடு. | • தனது ஆற்றலைப்பயன்படுத்தி தினசரி வேலைகளை செவ்வனே செய்து வருகிறார். இவர் தனது பண்ணைக்கு “சக்தி” என பெயரிட்டுள்ளார்.<br>• இவர் அங்கக வேளாண்மையைத்தனது 2.5 ஏக்கர் நிலத்தில் செய்து வருகிறார்.<br>• மேலும் எட்டு ஏக்கர் நிலத்தில் மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்து வருகிறார்.<br>• மண் காரத்தன்மை கொண்ட மணல் சார்ந்த களிமண் ஆகும்.<br>• இங்கு சராசரி மழையின் அளவு 650 மி.மீ. மிதமான மழை ஜீலை மாதங்களிலும், கனமழை நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலும் நிலவுகிறது.<br>• நீர் இறைப்பதற்கு மூன்று குதிரைத்திறன் பம்ப் செட் பயன்படுத்துவது தவிர, வேறு எந்த இயந்திரங்களும் பண்ணையில் உபயோகப்படுத்தவில்லை.<br>• சிறு கலப்பைகள் மற்றும் பண்ணைக்கருவிகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.<br>• அறுவடை, களையெடுத்தல் போன்ற வேலைகளை மனைவி, அம்மா உதவியுடன் செய்து வருகிறார். |
| 5. | திரு.N.S.A. வேலு முதலியார்,<br>4, சிதம்பர விநாயகர் கோவில் தெரு,<br>புளியாங்குடி,<br>நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்- 627 855,<br>தமிழ்நாடு. | திரு.N.S.A. வேலு முதலியார் அவர்களுக்கு விவசாயத்தில் 45 வருட அனுபவம் உள்ளது. கடந்த 15 வருடங்களாக நீடித்த நிலையான விவசாயம் செய்து வருகிறார். இவருடன் இணைந்து இவரது இளைய மகன் விவசாயத்தை செய்து வருகிறார்.<br>பயிர்கள்: பழ மரங்களான கொய்யா, எலுமிச்சை, தேங்காய், மா, நெல்லிக்காய் மற்றும் தேக்கு, சூபாபுல் மற்றம் நாவல் போன்ற மரங்களையும் பயிரிட்டுள்ளார். |
| 6. | திரு. P.தங்கசாமி,<br>கற்பக சோலை,<br>செந்தாங்குடி,<br>நகரம் அஞ்சல்,<br>ஆலங்குடி தாலுகா, | சிறந்த பேச்சாளரான இவரின் வாழ்க்கை மரங்களை வளர்ப்பதில் சென்று கொண்டிருக்கிறது. எந்த தலைப்பு எடுத்து பேசினாலும், அவருடைய பேச்சின் முடிவு மரங்களைப் புகழ்ந்து பேசியதாக இருக்கும். |

| | | |
|---|---|---|
| | புதுக்கோட்டை - 614 624, தமிழ்நாடு. | அவருக்கத் தேவையான வருமானம், தீவனம், இலை உரம், நல்ல கால நிலை இந்த மரங்களின் மூலம் கிடைக்கப்பெறுகின்றது. திரு. தங்கசாமி அவர்களுக்கு சொந்தமாக 25 ஏக்கர் நிலம் உள்ளது. கடந்த 15 வருடங்களாக மாற்று விவசாயம் செய்து வருகிறார். |
| 7. | குளோரியா மனை,<br>ஆரபிந்தோ ஆஸ்ரமம், பாண்டிச்சேரி – 605 002,<br>தமிழ்நாடு.<br>தொலைபேசி:0413-2666337, 2339017,<br>அலைபேசி: 094432 87531, 094432 72780<br>இமெயில்: glorialand@ Sancharnet.in | குளோரியா மனை, பால் பண்ணை 100 ஏக்கர் நிலத்தைக்கொண்ட அங்ககப்பண்ணை ஆகும். இரசாயனங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் விளைவுகளைக் கருத்தில் கொண்டு, 1967 ஆம் ஆண்டில் இருந்தே குளோரியா மனை அங்கக தொழில்நுட்பங்களைப் பின்பற்றி வருகிறது. பால் பண்ணை, பண்ணையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதி ஆகும். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 120 கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. சராசரி பால் உற்பத்தி, ஒரு நாளைக்கு 325 லிட்டர் ஆகும். தோராயமாக 250 கிலோ, மாட்டு சாணம் உயிர் வாயு தயாரிப்புக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. உயிர் வாயுக் கூடத்திலிருந்து பெறப்படும் கூழ்மம் உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. தோராயமாக 15-20 ஏக்கர் நிலத்தில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. சராசரி மகசூல் 40 டன் கிடைக்கிறது. |
| 8. | பாக்யதான் எஸ்டேட்,<br>P.O. பாக்ஸ் 63,<br>கொடைக்கானல் – 624 101, தமிழ்நாடு. | கொடைக்கானலில் இருந்து 20 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் பழனி மலையில் இந்த பாக்யதான் எஸ்டேட் உள்ளது. சராசரி மழை 80 - 100 செ.மீ. செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் பொழிகிறது. சிவப்பு மண் என மண் வகை பிரிக்கப்பட்டுள்ளது. சோலை வனங்களின் ஒரு பகுதியாக இந்த நிலம் உள்ளது. நதிக்கு அருகே இந்தப் பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. மூன்று ஏக்கர் நிலத்தில் காபிச்செடியும், 1.5 ஏக்கர் நிலத்தில் அன்னாசிப்பழமும் பயரிடப்பட்டுள்ளது. ஒரு கால்பகுதி நிலத்தில் மர நாற்றங்கால் அமைத்துள்ளனர். |
| 9. | திரு.N. சொக்கலிங்கம்,<br>No.82, விரட்டிபட்டு,<br>மதுரை -625010, தமிழ்நாடு. | விவசாயத்தில் 20 வருடம் அனுபவம் உள்ளவர். இவருக்கு சொந்தமாக 25 ஏக்கர் நிலங்கள் இரு வேறு இடங்களில் உள்ளன. இவர் நெல், தென்னை மற்றும் வாழை |

| | | |
|---|---|---|
| | | பயிர்களைப் பயிரிட்டு வருகிறார். |
| 10. | திரு.கோமதி நாயகம்,<br>No.18, உச்சி மகாலிங்கம் கோவில் தெரு,<br>புளியங்குடி,<br>நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்- 627 855,<br>தமிழ்நாடு.<br>விவசாய சேவா சங்கம்,<br>C.B. காம்ப்ளக்ஸ், காந்தி பஜார்,<br>புளியங்குடி-627 855,<br>நெல்லை மாவட்டம்,<br>தமிழ்நாடு.<br>அலைபேசி:0463 6233235.<br>தொலைபேசி: 96299 52536 | மூன்று தலைமுறைகளாக இவர் விவசாயம் செய்து வருகிறார். இவர் ஒரு ஆசிரியரும் கூட. இவரும் இவருடைய நண்பர்களும் சேர்ந்து விவசாய சங்கம் அமைத்து உள்ளனர். ஒவ்வொரு நாள் மாலையிலும் இவர்கள் சந்திப்பர். இந்த அமைப்பின் மூலம் 20 பத்திரிக்கைகள் மற்றும் நாளிதழ்களில் பதிவு செய்து அவற்றைப் படித்து உலக நிலவரங்களைப் பற்றிப் புரிந்து கொள்கின்றனர்.<br>செய்தித்தாள்களில் வரும், எந்த ஒரு சமூக நிகழ்வுகளையும் படித்து இவர் தனது கருத்தை, அஞ்சல் அட்டை வழியே அனுப்புவார். இவருடைய மொத்த குடும்ப உறுப்பினர்களும் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். அவருடைய மகன்களின் பள்ளிப்படிப்பை, 10-ஆம் வகுப்பு முடித்தவுடன் நிறுத்தி விட்டார். |
| 11. | கோரம் எஸ்டேட்,<br>ப்ளூரட்டீ,<br>சிவனடி ரோடு,<br>கொடைக்கானல் – 624 101.<br>தமிழ்நாடு. | கோரம் எஸ்டேட் கொடைக்கானலில் இருந்து16.3 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த எஸ்டேட் 1980 ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம் வாங்கப்பட்டது. அருகில் உள்ள நகரம் பெருமாள் மலை. இந்த எஸ்டேட் கடல் மட்டத்தில் இருந்து 4000 அடி உயரத்தில் உள்ளது. இதன் மேற்குப்பகுதியில் ஆனைமலையும், தெற்குப்பகுதியில் கொடைக்கானல் நகராட்சியும் உள்ளது. |
| 12. | அன்னபூர்ணா பண்ணை,<br>பாரத் நிவாஸ்(P.O.),<br>ஆரோவில் – 605 101,<br>தமிழ்நாடு.<br>தொலைபேசி: 04133155660,<br>இமெயில்:brooks@ auroville.org.in, | அன்னபூர்ணா பண்ணை தாமஸ், ஆன்ட்ரே மற்றும் ப்ரூக்ஸ் ஆகியோர்களால் நிர்வகிக்கப்படுகிறது. 135 ஏக்கர் பண்ணை சர்வதேச சோதனைத்திடலாக பாண்டிச்சேரியில் உள்ள ஆரோவில் என்ற இடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தப்பண்ணையில் 5 ஏக்கர் நெல், 35 ஏக்கரில் சிறுதானியங்களும் வளர்க்கப்படுகின்றது. பாரம்பரிய பயிர் ரகங்கள் மட்டுமே பயன்படுத்துகின்றனர். சிறுதானியங்களான குதிரைவாலி மற்றும் வரகு பயிர் செய்யப்படுகின்றது. சில புளிய மரங்களும், சவுக்கு மரங்களும் நடவு செய்யப்பட்டுள்ளன. பண்ணையில் |

| | | |
|---|---|---|
| | | ஹைபிஸ்கஸ் சப்டேரிவா, ரோசல்லா வளர்க்கப்பட்டுள்ளன. இந்த செடியின் பழம் காய வைக்கப்பட்டு, சாறு எடுக்கப் பயன்படுத்தப்படுகிறது. |
| 13. | கொளுஞ்சி பண்ணை,<br>எழில் நகர்,<br>கீரனூர்,<br>புதுக்கோட்டை மாவட்டம்- 622 502, தமிழ்நாடு. | இந்தப் பண்ணைக் குடும்பம் என்ற அரசு சாரா அமைப்பு 1992 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மொத்தம் ஐந்து குடும்பங்கள் இங்கு தங்கியிருந்து பண்ணை வேலைகளை செய்து கொண்டிருக்கின்றனர். நிலத்தை வாங்கும் பொழுது வெறும் தரிசு நிலமாக இருந்தது. அதன் பின்னர் நீர் சேமிப்புத்தொட்டி கட்டி, அதன் மூலம் கிடைக்கம் நீரைக்கொண்டு மரங்களை நடவு செய்தனர். |
| 14. | சந்தோஷ் பண்ணை,<br>ஊருட் பண்ணாடி நிவாஸ்,<br>கோட்டூர்,<br>மலையாண்டி பட்டணம்,<br>பொள்ளாச்சி,<br>கோயம்புத்தூர் - 642 114,<br>தமிழ்நாடு.<br>தொலைபேசி: 04259-286499, 286504.<br>அலைபேசி: 09442416543<br>இமெயில்:santoshfarms@ gmail.com,<br>தொடர்பு: திரு.மதுராம கிருஷ்ணன். | சிறு வயதில் விவசாயத்தை வெறுத்தவர் இவர். ஏனெனில் மற்ற துறைகளைக் காட்டிலும், குறைந்த வருமானமே விவசாயத்தில் கிடைத்தது. பொறியாளராக ஆசைப்பட்டு கல்வி பயின்ற இவர் பின்னர் தொழிற்சாலைகள் பக்கம் தனது கவனத்தைத் திருப்பினார். கடந்த 25 ஆண்டுகளாக விவசாயம் செய்து வந்துள்ளார். இருப்பினும், சமீபத்தில் அவர்களின் “ஒரு ஸ்ட்ரா ஃப்யூகூகாஸ் புரட்சி” என்ற புத்தகத்தை படித்த பின்னர் இயற்கை வளங்களைப் பற்றிப் புரிந்து கொண்டார்.<br>இந்தப்பண்ணை அமைப்புப் பின்வருமாறு: தென்னை - 32 ஏக்கர், மா - 5 ஏக்கர், தேக்கு - 5 ஏக்கர், புளியமரம்-4 ஏக்கர் மற்றும் தீவனப்பயிர்கள்-2 ஏக்கர். தென்னை தோப்புகளின் இடையே கோ-கோ, கறிப்பலா, பாக்கு மற்றும் மருந்துப்பயிர்கள் ஊடுபயிராகப் பயிரிட்டுள்ளார். தேக்கு மரத்தில் வெற்றிலைக் கொடியைப்படர செய்துள்ளார். ஒரு சிறு பழத்தோப்பு உள்ளது. அதில் பலாப்பழம், சிக்கோ, நெல்லி, கொய்யா போன்ற மரங்கள் உள்ளன. ஊடுபயிராகத் தேர்ந்தெடுக்கப்படும் பயிர்கள் மற்றும் மரங்கள் அதிக இலையுதிர் தன்மையைக் கொண்டதாக இருக்கும். மண் அரிப்பைத் தடுக்க வெட்டிவேர் பயிர் செய்யப்பட்டுள்ளது. |
| 15. | திரு.N.நாகராஜ்,<br>N.N.பண்ணை, | நாகராஜ் அவர்கள் ஒரு சிறந்த மலர் சாகுபடியாளர். |

| | | |
|---|---|---|
| | 244, பகுட்டம்பாளையம், எக்கரைதத்தப் பள்ளி அஞ்சல், பவானி சாகர் வழி, 638451, ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு. தொலைபேசி: 09443071495 | இவர் வாழை மற்றும் மஞ்சள் அங்கக முறையில் சாகுபடி செய்து வருகிறார். பஞ்சகாவ்யா, மூலிகை விரட்டிகள் மற்றும் மண்புழு உரம் ஆகியவற்றை பண்ணையிலேயே தயாரிக்கிறார். தேவை போக மீதமுள்ளவற்றை விற்பனை செய்து வருகிறார். |
| 16. | திருமதி.S.பூங்கொடி / திரு.R.செல்வம், புது நிலவு அங்கககப்பண்ணை/ மனோன்மணி சுவாமி பண்ணை, தலவுமலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம்- 638 101, தமிழ்நாடு. தொலைபேசி: 0424-2357537, இமெயில்: manpulue@rediffmail.com | புது நிலவு அங்ககப்பண்ணை 1999-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் என்னவெனில் மண்புழு உரம் தயாரிப்பது ஆகும். செல்வம் மற்றும் அவரின் மனைவி, மண்புழு உரத்தைப் பற்றிய விழிப்புணர்வை விவசாயிகளிடையே ஏற்படுத்தி வருகின்றனர். தமிழ் இலக்கியங்களில் மண்புழு பற்றி விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளதை மனோன்மணி அவர்கள் தெளிவுபடுத்துகிறார். இந்தப்பண்ணை 2.6 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில் 80 வெவ்வேறு ரகங்களில், 400 மரங்கள் வளர்க்கப்படுகின்றன. கால் பங்கு பண்ணை, பயிற்சி வகுப்புகளுக்கு ஒரு மாதிரியாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. |
| 17. | திரு. V.S. அருணாச்சலம், எழுங்கதிர் அங்ககப் பண்ணை, வெள்ளாளபாளையம் (அஞ்சல்), கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம் - 638 476 தமிழ்நாடு. தொலைபேசி: 04285-246 301 அலைபேசி: 94433 46323. | திரு. V.S. அருணாச்சலம், ஒரு சிறு விவசாயி மகன், கிராமப்புறப் பிண்ணனி உடைய இவர் ஐ.டி.ஐ. டிப்ளமா பயின்றுள்ளார்.<br>இவரது பண்ணையின் சிறப்பம்சங்கள்:<br>• பயிர்களுடன் வெள்ளாடு வளர்ப்பை ஒருங்கிணைப்பது<br>• ஆட்டு கழிவுப்பொருட்களைக்கொண்டு பஞ்சகாவ்யா தயாரிப்பு<br>• மாட்டு கோமியத்தை பாசன நீருடன் கலப்பது.<br>• வாழை மரங்களுக்கு இடையே மண்புழு உரம் தயாரிப்பு<br>• கரும்பில் மூடாக்கிடல்<br>• ஒரு நெல் நாற்று நடவு முறை<br>• வெவ்வேறான, 20 பயிர் விதைகளை விதைத்து பசுந்தாள் உரம் தயாரிப்பு |
| 18. | திரு.K. மோகனசுந்தரம் மற்றும் திருமதி.புஷ்பராணி, அமுதசுரபி அங்ககப்பண்ணை பயிற்சி மையம், 12, திங்களூர் ரோடு, | திரு.மோகனசுந்தரம் அவரது மனைவி திருமதி. புஷ்பராணி அவரது பண்ணையில் அங்கக வேளாண்மை பற்றிய பயிற்சி கொடுத்து வருகின்றனர். இவர்களுக்கு சொந்தமாக மூன்றரை ஏக்கர் நிலம் |

| | | |
|---|---|---|
| | நசியனூர் அஞ்சல்,<br>ஈரோடு மாவட்டம். | உள்ளது. இதில் 1 ½ ஏக்கர் நிலத்தை இவர்கள் சொந்தமாகப் பயன்படுத்துகின்றனர். மீதமுள்ள இரண்டு ஏக்கர் நிலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. கடந்த 8 வருடங்களாக அங்கக விவசாயம் செய்து வருகின்றனர். இவருடைய தந்தை, 1986 ஆம் ஆண்டு இரசாயன உரங்களைப்பயன்படுத்தி மக்காச்சோள சாகுபடியில், மாநில அளவில் முதல் பரிசைப் பெற்றுள்ளார். அவர்கள் அந்த சமயத்தில் இரசாயன உரங்களை மட்டுமே பயன்படுத்தினர். இரசாயன பூச்சிக்கொல்லிகள் எதுவும் பயன்படுத்தவில்லை. |
| 19. | திரு.ஆர்.நல்லுசாமி மற்றும் திருமதி.சாந்தி,<br>கோப்பம்பட்டி ஆஞ்சல்,<br>துறையூர் தாலுாகா,<br>திருச்சி -621 012.<br>தமிழ்நாடு. அலைபேசி: 04327-253366 | திரு. ஆர். நல்லுசாமி மற்றும் அவரது மனைவி திருமதி. சாந்தி, மிகப் பிரபலமான மரவள்ளி சாகுபடி விவசாயிகள். சமீப காலத்தில் அவருடைய 25 ஏக்கர் நிலத்தையும் அங்கக நிலமாக மாற்றியுள்ளார். சில வருடங்களுக்கு முன்னர் அவர் நம்மாழ்வாரை சந்தித்துப் பேசினார். அவர் அங்கக வேளாண்மையைத் தீவிரமாக பின்பற்ற அறிவுரை வழங்கினார். இதைத் தொடர்ந்து அவர் பல்வேறு அங்ககப் பண்ணைகளைப் பார்வையிட்டு அவருடைய சொந்தப்பண்ணையை அங்கக நிலமாக மாற்றியுள்ளார். 10 ஏக்கர் நிலத்தில் மரவள்ளி சாகுபடி, 5 ஏக்கரில் மஞ்சள், 6 ஏக்கரில் தென்னை, மற்றும் மீதமுள்ள நான்கு ஏக்கரில் நெல், வெங்காயம் மற்றும் காய்கறி சாகுபடி செய்து வருகிறார். திருமதி. சாந்தி மற்றும் அவரது கணவர் திரு.ஆர். நல்லுசாமியுடன் இணைந்து பண்ணையைப் பராமரித்து வருகிறார். இவர்களுக்கு சொந்தமாக 5 சிந்தி மாடுகள் உள்ளன. இவர் தற்போது மூலிகை மருந்து, பஞ்சகாவ்யா மற்றும் மண்புழு உரம் தயாரித்து வருகிறார். அங்கக உரங்களுடன் பூச்சி மேலாண்மை உத்திகளையும் சேர்த்துப் பயன்படுத்துவதால், பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் எந்த ஒரு பூச்சிகளையும் காண முடிவதில்லை. மேலும் எலிகள் இவருடைய பண்ணையைத் தாக்குவதில்லை. |
| 20. | திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி, | விளைநிலங்களில் 15 ஏக்கர் நிலம் சொந்தமாக |

| | | |
|---|---|---|
| | குள்ளம்பாளையத்தார் தோட்டம்,<br>பெருமாபாளையம்,<br>நாகலூர் அஞ்சல்,<br>அத்தானி வழி- 638 502,<br>பவானி தாலூகா,<br>ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு.<br>தொலைபேசி: 042567-261463 | இருந்த போதிலும், அவரால் தனது தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இவரது நிலம் வறட்சி பாதிப்புக்குள்ளாகும் பகுதியில் இருப்பதால் நீர் பற்றாக்குறை ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. களைகள் அதிகமாக வளர்ந்து நிலத்தின் வளத்தைப் பாதித்ததால், அவர் விரக்தி அடைந்து விட்டார். பின்னர், அவர் அங்கக வேளாண்மை பற்றி அறிந்து கொண்டு, ஒரே நாளில் தன்னுடைய நிலத்தை அங்கக நிலமாக மாற்ற முடிவு செய்து விட்டார். இவ்வாறு செய்த பின்னர் பண்ணை பராமரிப்பு செலவு குறைந்தது உடன் நீர் பற்றாக்குறை மற்றும் களைகளின் பிரச்சினைகள் குறைந்தது இவருக்குத் திகைப்பூட்டியது. இவர் நிலத்தை விற்பனை செய்ய இருந்த குறிக்கோளை விடுத்து, விவசாயியாகவே இருக்க முடிவு செய்து விட்டார். தற்பொழுது, இவருக்கு சொந்தமாக 30 ஆடுகள் மற்றும் 2 மாடுகள் உள்ளன. தென்னந்தோப்பு 3 ஏக்கரிலும், மக்காச்சோளம் 2 ஏக்கரிலும், கம்பு 2 ஏக்கரிலும் மற்றும் 1 ஏக்கர் நிலத்தில் பல்வேறு காய்கறிகளும் பயிரிடப்பட்டுள்ளன. மீதமுள்ள பண்ணை நிலம் ஆடு மேய்ச்சலுக்காக விடப்பட்டுள்ளது. |
| 21. | திரு.V.C.கண்ணன்,<br>220, திருமாலிருஞ்சோலை,<br>புது காரைப்புதூர் (அஞ்சல்),<br>கோபி செட்டிபாளையம்-638313,<br>ஈரோடு மாவட்டம்,<br>தமிழ்நாடு.<br>தொலைபேசி: 04285-266303,<br>அலைபேசி: 09842761232. | சில வருடங்களுக்கு முன் திரு. கண்ணன் தனது 6 ஏக்கர் நிலத்தை முழு அங்கக நிலமாக மாற்றியுள்ளார். மேலும் இரசாயன விவசாயத்தின் தீமைகள் மற்றும் மண்வளம் பாதிப்பு பற்றியும் இவர் தெரிந்து கொண்டார். |
| 22. | திருமதி.ரீட்டாகணபதி,<br>இலுப்பக்கோரை<br>614 202,<br>கணபதி அஹர்ஹாரம்(வழி),<br>பாபநாசம் தாலூகா, தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு. | திருமதி.ரீட்டா கணபதி, தனது 5 ஏக்கர் விவசாய நிலத்தில் நெல், காய்கறிகள், தென்னை மற்றும் கரும்பு சாகுபடி செய்துள்ளார். தென்னந் தோப்புகளின் இடையே மஞ்சள் ஊடுபயிராகப் பயிர் செய்துள்ளார். வீட்டுத் தேவைகளுக்குத் தேவையான பொருட்களைப் பண்ணையிலேயே எடுத்துக்கொண்டு, |

| | | |
|---|---|---|
| | | மீதமுள்ளவற்றை விற்பனை செய்தார். காய்கறிகளைத் தொடர்ந்து விற்பனை செய்வதன் மூலம் நிரந்தர வருமானம் கிடைப்பதை இவர் உணர்ந்தார். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் விவசாயத்தில் ஈடுபட்டனர். கடந்த 10 ஆண்டுகளாக அங்கக விவசாயிகளாக மாறியுள்ளனர். முன்னர் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தினர். இரசாயன உரங்களின் செலவு அதிகரித்துள்ளதால், அங்கக விவசாயத்திற்கு மாறியுள்ளார். இவருக்கு சொந்தமாக கால்நடைகள் உள்ளதால், பஞ்சகாவ்யா, மண்புழு உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளைத் தயாரித்துக் கொள்கிறார். |
| 23. | திரு.பி.சி.சுப்பிரமணியம்,<br>நசியனூர்,<br>பள்ளிபாளையம், ஈரோடு<br>மாவட்டம்- 638 107,<br>தமிழ்நாடு.<br>தொலைபேசி: 04326-240555. | திரு.பி.சி.சுப்பிரமணியம் ஒரு குறு விவசாயி. இவர் அங்கக முறையில் ஒருங்கிணைந்த பண்ணையம் செய்து வருகிறார். ஆழ்கூள வளர்ப்பு முறையில், ஆடு வளர்க்கிறார். ஆடு வளர்ப்பின் மூலம் நல்ல வருமானம் கிட்டியது. மேலும் இதன் மூலம் கிடைக்கும் உரத்தைப்பயன்படுத்தி மண் வளத்தைப் பெருக்கினார். நீர் தக்க வைத்திருக்கும் திறனை அதிகரித்துள்ளார். நாட்டு ஆட்டினங்களை வைத்து, அதன் மூலம் கிடைக்கும் உரங்களைப் பயன்படுத்தி அங்கக விவசாய நடைமுறைகளை செய்து வந்தார். |
| 24. | திரு.K.S.ராகவன்,<br>எண்: 2, உப்புக்கிணறு வீதி,<br>கோட்டூர், M. பட்டினம் அஞ்சல்,<br>பொள்ளாச்சி,<br>கோயம்புத்தூர்-642114,<br>தமிழ்நாடு.<br>தொலைபேசி: 04259-2522271 | சராசரியாக 27 -30 வயதுள்ள, 430 தென்னை மரங்கள் இவருடைய பண்ணையில் வளர்க்கப்பட்டு வருகின்றன. பசுமைப்புரட்சி ஏற்பட்ட பின்னர், 1960 லிருந்து எந்த ஒரு ரசாயனங்களும் பயன்படுத்தவில்லை. 1994 ஆம் ஆண்டு இந்த பகுதி தீவிர வறட்சிக்குட்பட்டது. தண்ணீர் பற்றாக்குறையை சரி செய்ய சொட்டு நீர்ப்பாசனத்தை இவரது வயலில் அறிமுகப்படுத்தினார். ஆழ்குழாய் கிணறு அமைத்து, 300 அடி ஆழத்தில் நீரை பெற்றார். படுக்கைமுறை நீர்பாசனம் செய்து அதில் சில அங்கக உரங்களை இட்டார். ஒரு மரத்திற்கு 120 தென்னங் காய்களைஅவரால் பெற முடிந்தது. |

| | | |
|---|---|---|
| | | ஒற்றை முறை பயிர் நடவு மற்றும் தீவிர ரசாயன உரங்களின் பயன்பாடு இவருடைய நிலத்தைப் பாதித்த முதன்மை எதிரிகள். விவசாயிகள் தங்களது நிலத்தை மூடாக்கு செய்யாத காரணத்தினால் நீர் ஆவியாகி, மண்ணின் ஈரப்பதம் வெகு விரைவில் குறைந்து விடுகிறது. கிணறுகளுக்கு நீர்ப்பிடிப்புத்தன்மை குறைந்துள்ளதால் எளிதில் வறண்டு விடுகிறது. வருங்காலத்தில் நீர்ப்பாசனம் செய்யாமல் கூட, தனது நிலத்திலிருந்து அதிக வருமானம் ஈட்ட முடியும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளார். |
| 25. | திரு.தங்கராசு மற்றும் திருமதி. பானுமதி,<br>236/4,<br>அக்கரைக்கொடிவேரி(அஞ்சல்),<br>காசிபாளையம்(வழி),<br>கோபி செட்டிபாளையம்,<br>ஈரோடு மாவட்டம்-638 454.<br>தொலைபேசி: 04285-264150. | நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் சில வருடங்களுக்கு முன்னர் அங்கக விவசாய முறைக்கு மாறியுள்ளனர். இவர்கள் நிலையான அங்கக விவசாய முறைகளைப் பின்பற்றி வருகின்றனர். இவர்கள் தொடர் பயிர் சாகுபடி முறையில் திறமை பெற்றவர்கள். |
| 26. | திரு. V. ரவி,<br>ராஜ் செட்டியார் தோட்டம்,<br>உப்புப்பள்ளம், கெஞ்சனூர் (அஞ்சல்),<br>சத்தியமங்கலம் (வழி),<br>ஈரோடு மாவட்டம் - 638 401,<br>தமிழ்நாடு.<br>தொலைபேசி: 04295-24779 | திரு. V. ரவி அவர்கள் தனது பண்ணையில், பல்வேறு மரங்களை வளர்த்து வருகிறார். அவை நெல்லி, பதிமுக்கம் (பட்டைகளில் இருந்து வண்ணமூட்டும் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றது), சப்போட்டா மற்றும் கொய்யா. இவர் சொட்டு நீர்ப்பாசனத்தின் மூலம் நீர்ப் பாசனம் செய்கிறார். மண்புழுக்கள் மற்றும் மண்புழு கழுவிய நீரை விற்பனை செய்து வருகிறார். |
| 27. | திரு.N.கோபால கிருஷ்ணன்,<br>No.4/19, அகிலா நகர்,<br>முதல் குறுக்கு,<br>கணபதி நகர்,<br>தெற்கு விரிவாக்கம்,<br>மாம்பழசாலை,<br>திருவானைக்கோயில்,<br>திருச்சி-620 005.<br>தமிழ்நாடு. | திரு.N.கோபால கிருஷ்ணன், சொந்த ஊர் கரூர் மாவட்டத்தில் உள்ள பணிக்கம்பட்டி கிராமம் ஆகும். இவருடைய தந்தை மற்றும் தாயார் படிப்பறிவு அற்றவர். இவர்களுடைய கடின உழைப்பால் நில அளவு அரை ஏக்கரில் இருந்து 60 ஏக்கர் உயர்த்தி எங்கள் படிப்பு செலவையும் செய்தார். இதில் 10½ ஏக்கர் நிலத்தை தனது பங்காக எடுத்துக்கொண்டு அதில் விவசாய உத்திகளை செய்து வந்தார். எனது அனுபவத்தில் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் எந்த வித ஊக்குவிப்பும் அளிக்கவில்லை. அடிப்படை இடுபொருட்களின் விலை மாற்றங்களில் |

| | | |
|---|---|---|
| | | ஏற்றத்தாழ்வு காணப்பட்டதால், சாகுபடி செலவு அதிகரித்தது. அதே சமயம், மகசூல் கணிசமாகக் குறைந்து விட்டது. இரசாயன விவசாயத்தை 1998 ஆம் ஆண்டு வரை தொடர நேரிட்டது. வேளாண் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்ற உறுதியான உணர்வோடு, இரசாயன பொருட்களின் பயன்பாட்டினால் நில சீரழிவு மற்றும் சுகாதார சீர்கேட்டில் இருந்து மனிதர்களின் உடல் நலத்தை பாதுகாக்க வேண்டி இயற்கை விவசாயத்தை 1998ஆம் ஆண்டு தொடங்கினார். |
| 28. | திரு.P.B.முகுந்தன்,<br>H.No.92, ராஜாஜி வீதி,<br>செங்கல்பட்டு- 603001,<br>காஞ்சிபுரம் மாவட்டம்.<br>தமிழ்நாடு.<br>தொலைபேசி: 044-27423902.<br>அலைபேசி: 09382337818 | திரு.P.B.முகுந்தன், அங்கக விவசாயி, இவர் 40 நாட்டு மாடுகளைக்கொண்ட மாட்டுப்பண்ணை வைத்துள்ளார். ஐந்து வருடங்களுக்கு முன்னர் இவர் தமிழ்நாட்டிலிருந்து ராஜஸ்தான் வரை சென்று, நாட்டு மாடு இனங்களைக் கண்டறிந்து அவற்றில் சில இனங்களைத் தேர்ந்தெடுத்து இந்தப்பண்ணையை உருவாக்கியுள்ளார். முதலில் இவர் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பாளி மற்றும் துர்காபூர் இடங்களில் இருந்து11 தர்பார்கார் மாட்டு இனங்களைக் கொண்டு வந்தார். சில உள்ளூர் விவசாயிகளின் உதவியுடன் ஜெய்சல்மார் கிராமத்தில் இருந்து 30 க்கும் அதிகமான நாட்டு இனங்களைக்கொண்டு வந்தார். ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை ஒரு புதிய காளை அறிமுகப்படுத்துவது ஏற்றது என அறிவுறுத்தினார். உள் இனப் பெருக்கத்தினால் தரமான தலைமுறைகள் பெறப்படுவதில்லை. தர்பார்கார் காளையை சமீபத்தில் அவர் அறிமுகப்படுத்தினார். ஒரு கறவைக்கு 3200 லிட்டர் பால் கொடுக்கிறது. இவர் தனக்கு தேவையான தீவனத்தை, சத்திய மங்கலத்தில் உள்ள திரு. சுந்தர ராமனின் அங்ககப்பண்ணையில் இருந்து பெற்றுக்கொள்கிறார். இதனுடன் தீவனக்கலவையுடன் ராகி, மக்காச்சோளம், உளுந்து மற்றும் துவரைப் பொடிகளைக் கலந்தும் கொடுக்கிறார். நிலக்கடலை பிண்ணாக்கு மற்றும் வேகவைத்த உமி |

| | | |
|---|---|---|
| | | ஆகியவற்றைத் தெரிந்த பண்ணையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்கிறார். இதனால் பாலின் தரம் மற்றும் விலங்குகளின் நலத்தைப் பாதுகாக்க முடியும். மாட்டின் சராசரி பாலின் அளவு ஒரு நாளைக்கு 8 முதல் 10 லிட்டர் ஆகும். |
| 29. | திரு.இளங்கோவன்,<br>அழகு அறக்கட்டளை, 39,<br>திருமஞ்சன வீதி,<br>லால்குடி தாலூகா,<br>திருச்சி- 621601, தமிழ்நாடு.<br>தொலைபேசி: 0431-2543755.<br>அலைபேசி: 9842411953 | லால்குடி, இடையாற்று மங்கலம் கிராமத்தில் இந்த 3 எக்டர் பண்ணை அமைந்துள்ளது. இவர் மண்புழு உரம் மற்றும் அங்ககப் பண்ணை முறைகளை கடந்த ஐந்து ஆண்டுகளாக உபயோகித்து வருகிறார். நெல், கரும்பு, வாழை, தென்னை போன்ற பயிர்களைப் பயிரிட்டு வருகிறார். தேவைக்குப் போக மீதமுள்ள பொருட்களை விற்பனை செய்கிறார். மேலும் நுகர்வோர்களுக்கு அங்கக உணவுகளின் நன்மைகள் பற்றியும் எடுத்துக்கூறி வருகிறார். திரு. இளங்கோவன், 1996ஆம் ஆண்டில் இருந்து ஜில்லாபரிசத் வாரிய உறுப்பினராக இருந்து வருகிறார். மாவட்ட பஞ்சாயத்து மற்றும் அழகு அறக்கட்டளை மூலம் அங்கக விவசாய முறைகளைப் பரவலாக்கம் செய்து வருகிறார். இந்த அறக்கட்டளை 45 உள்ளூர் குழுக்கள் மற்றும் 1000 விவசாயிகள் கொண்டது. 408 பஞ்சாயத்துகளில் செயல்பட்டு வருகிறது. |
| 30. | திரு.V.ஆண்டனி சாமி,<br>53, மேற்கு கார் வீதி,<br>சிந்தாமணி,<br>புளியங்குடி தாலூகா,<br>சிவகிரி மாவட்டம்,<br>திருநெல்வேலி,<br>தமிழ்நாடு.<br>தொலைபேசி: 04636 233343<br>அலைபேசி:94435 82076 | திரு.V. ஆண்டனி சாமி, கடந்த 19 வருடங்களாக தனது 150 ஏக்கர் பண்ணையில் அங்கக விவசாயம் செய்து வருகிறார்.<br>1991 ஆம் வருடம் இவர் அங்கக முறை சார்ந்த விவசாயம் செய்யத் தொடங்கி விட்டார். இவருடைய முதல் அங்ககப் பயிர் நெல் பின்னர் இவர் கரும்பு, பழங்கள் மற்றும் காய்கறிகளை அங்கக சாகுபடி முறைகளைப் பின்பற்றி வளர்த்தார். |
| 31. | திரு.ஆர்.சீனிவாசன்,<br>குறும்பக்கரை அஞ்சல்,<br>பொலம்பாக்கம்,<br>செய்யூர்-603 309,<br>காஞ்சிபுரம் மாவட்டம்.<br>தமிழ்நாடு.<br>அலைபேசி: 9884756090 | குறும்பக்கரை கிராமத்தில் 15 ஏக்கர் நிலம் இவருக்கு சொந்தமாக உள்ளது. கடந்த 40 ஆண்டு காலமாக இரசாயன விவசாயம் செய்து வந்த இவர், சில வருடங்களுக்கு முன்பு அங்கக விவசாயத்திற்கு மாறியுள்ளார். ராகி, மக்காச்சோளம், மிளகாய், கரும்பு, நிலக்கடலை, பயறு வகைகள் போன்ற |

| | | |
|---|---|---|
| | | பயிர்கள் இவரது பண்ணையில் பயிரிடப்பட்டு வருகின்றன. தற்சமயம் இவர் கரும்பு - 20 ஏக்கர், எலுமிச்சை - 60 ஏக்கர், நெல்லிக்காய் - 20 ஏக்கர், நெல் -30 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்துள்ளார். உளுந்து மற்றும் மக்காச்சோளம் அறுவடைக்குப் பின்னர் , தெளிப்பு நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்தி நிலக்கடலை சாகுபடி செய்கிறார். தேவைக்கு அதிகமாக உள்ள பொருட்களை சந்தைப்படுத்துகிறார். நடைமுறையில், கரும்பு-20 ஏக்கர், எலுமிச்சை-60 ஏக்கர், நெல்லிக்காய்- 20 ஏக்கர், நெல்-30 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்துள்ளார். மீதமுள்ள வயலில் காய்கறிகள் சாகுபடி செய்து வருகிறார். |
| 32. | திரு.A.ராஜபாண்டியன்,<br>No.2. Dr. சாமிநாதன் வீதி,<br>மாருதி நகர்,<br>ராஜ கீழ்ப்பாக்கம் - 600 073,<br>சென்னை, தமிழ்நாடு.<br>தொலைபேசி: 044-22270687,<br>அலைபேசி: 98406 20660 | இவரது பண்ணை மூவலூர் அஞ்சலில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளது. இரசாயன விவசாயம் 20 வருடங்கள் செய்த பின்னர், அங்கக விவசாயத்திற்கு 2 வருடங்களுக்கு முன்னர் மாறியுள்ளார். மேலும் நகர மையமாக்கல் அதிகரித்து வந்ததால், கிராமங்களில் ஆட்கள் பற்றாக்குறை அதிகரித்து விட்டது. தென்னை, நெல், சில காய்கறிகள், பருத்தி, கரும்பு போன்ற பயிர்களைப் பயிரிட்டு வருகிறார். ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் 25 பைகள் நெல் அறுவடை செய்து, அவற்றை (TNCSC நுகர்வோர் போக்குவரத்து கழகத்திற்கு அளித்து வருகிறார்). மண்புழு உரம், பஞ்சகாவ்யா, மூடாக்கு, தொழு உரம், கம்போஸ்ட் ஆகியவற்றை உபயோகிக்கிறார். பண்ணையில் உள்ள மாடுகளில் இருந்து சாணம் கிடைக்கிறது. ஆழ்குழாய் கிணறு உபயோகித்து நெல்லுக்கு நீர்ப்பாசனம் செய்கிறார். நெல் மற்றும் கரும்பு பயிர்கள் மாற்றிப் பயிரிடப்படுகின்றன. நெல் மற்றும் பருத்தி 2:1 என்ற விகிதத்தில் விதைக்கப்படுகின்றன. |
| 33. | திரு.P.அடைக்கலராஜ்,<br>S2/36, S.M.E.S.C. காலனி,<br>11 குறுக்கு, K.K. நகர் (அஞ்சல்),<br>திருச்சிராப்பள்ளி - 620 021.<br>தமிழ்நாடு, | மணப்பாறை தாலுகாவில் உள்ள வல்லநாடு கிராமத்தில் 4 ஏக்கர் பண்ணை நிலம் உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக ராஜி அங்கக விவசாயம் செய்து கொண்டு வருகிறார். நெல் மற்றும் பருத்தி, தொழு உரம் கொண்டு |

| | | |
|---|---|---|
| | அலைபேசி: 9443581704 | வளர்க்கப்படுகின்றன. தற்சமயம் மூடாக்கு பயன்படுத்தி ஆராய்ச்சி செய்து வருகிறார். நெல் மற்றும் பயறு வகைப்பயிர்கள் 2:1 என்ற விகிதத்தில் விதைக்கப்படுகின்றன. ஒரு பருவத்துக்கு ஒரு முறை பசுந்தாள் பயிர்கள் விதைக்கப்படுகின்றன. உள்ளூர் விவசாய கூட்டமைப்பில் இவர் ஒரு உறுப்பினர். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இவர்கள் ஒன்று கூடி விவசாய தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். |
